மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து அளிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும் பொழுது குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் நிலத்திற்கு பட்டா வழங்கப்படும் என்று சொன்னார்கள். இப்பொழுது குத்தகைக்காரர்களாக இருக்கும் அவர்களுக்கே கொடுக்கப்படுமா அல்லது அந்த நிலம் ஏழைகளுக்கு விநியோகிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 1950 திருவிதாங்கூர்-கொச்சின் சட்டப்படி இப்பொழுது அவர்களுக்குக் குத்தகைக்கு விடப் பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்று தர்க்கா சட்டம் அமல் படுத்தப்படும் நேரத்தில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். இப்பொழுது யார் நிலத்தை உழுகிறார்களோ அப்படி உழுகின்றவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் யோசிக்கும்.

ஜவ்வாது மலைப்பகுதியில் அணுவளக் கனிப்பொருள்கள்

*513. **வினா—திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், ஜவ்வாது மலைப்பகுதியில் அணுசக்தி உற்பத்திக்குத் தேவையான யுரேனியம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இந்திய அணுமின் ஆய்வுத்துறை வடஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையைச் சுற்றியுள்ள ஆண்டியப்பனூர் பகுதியில் அணுவளக் கனிப்பொருட்களை கண்டறிய நில ஆய்வு செய்தது. ஆனால் மேற்கண்ட இடங்களில் குறிப்பிடத்தக்க யுரேனியம் அடங்கிய கனிப்பொருட்கள் ஒன்றும் கண்டு பிடிக்கப்படவில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, யுரேனியம் கண்டு பிடிக்கப்பட வில்லை என்று சொன்னார்கள். வேறு சில கனிப்பொருள்களை அங்கே கண்டறிந் திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிக் கண்டறிந்த பொருள்கள் என்ன, அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது திட்டம் அளித்திருக்கிறார்களா, தொழில்கள் ஆரம்பிப்பதற்கு உதவி செய்திருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

1972 மார்ச் 15]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தப் பகுதியிலே "ரேடியோ ஆக்டிவ் வெரைடீஸ்" பரிசீலிக்கப்பட்டு தோரியம் ஓரளவு இருப்பதாகவும், இந்த யுரேனியம் சிறுசிறு பகுதி இருக்கின்ற பொருள்கள் காணப்படுவதாகவும், அதே சமயத்தில் "கமர்ஷியல் சோர்ஸஸ் ஆப் யுரேனியம்" அந்த அளவிற்குக் கிடைக்கவில்லை என்று தகவல் கிடைத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் சைக்கிள் தொழிற்சாலை

*514. வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் சைக்கிள் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, நம்முடைய நாட்டிலே சைக்கிள்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கு நல்ல கிராக்கி இருப்பதால் அப்படி ஒரு சைக்கிள் தொழிற்சாலையைக் கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்க அரசு இனிமேலாவது திட்டங்களைத் தயாரிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது அதுபற்றிப் பரிசீலனையில் இல்லை.

அண்ணா சமாதியை மேம்படுத்தல்

*515 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேறிஞர் அண்ணா அடக்கம் செய்யப்பட்ட இடத்தினை மேலும் மைசூர் பிருந்தாவனம் போல அபிவிருத்தி செய்ய அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அறிஞர் அண்ணா அவர்களின் சமாதியின் அருகில் குழந்தைகள் பூங்கா என்றை சுமார் 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்க ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், அதைப் போலவே வெளிநாடுகளிலிருந்தும் வரக் கூடியவர்கள் அண்ணா சமாதியைப் பார்க்காமல் செல்வதில்லை. தினந்தோறும்